# சமகாலத்தியப் பெண் கவிஞர்களின் கவிதைமொழி

ந.முருகேசபாண்டியன்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழில் கவிதை வடிவம், ஒப்பீட்டளவில் அதிக அளவில் படைப்பாளர்களைக் கவர்ந்துள்ளது. நவீன உலகில் கவிதையின் இடம் சுருங்கிக் கொண்டிருக்கிறது என்று நுகர்பொருள் உருவாக்கிய புனைவைத் தகர்த்துவிட்டு, இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியத்தில் நாளும் நவகவிதை எனத் திசைகள்தோறும் கவிஞர்களின் குரல்கள் ஒலிக்கின்றன. கவிதையை ரசிப்பது வேறு, எழுதுவது வேறு என்ற துல்லியமான மனநிலை எங்கும் பரவலாகியுள்ளது. மொழியினால் ஆன சொற்கள்மூலம், மனித மனத்தின் நுட்பங்களைக் கண்டறிதலில் கவிதையானது, பொதுமொழியில் இருந்து வேறுபடுகிறது. கவிதை என்பது சொற்களின் குவியல் என்ற நிலைக்கப்பால், அது உணர்வில் கசிந்திடுவதுடன், மனதில் எப்பொழுதும் உறைந்திருக்கிறது. கவிதையைப் பால் அடையாளத்துடன் அணுகுவது, தமிழிலக்கிய மரபில் முரணானது அல்ல. என்றாலும் தொண்ணூறுகளில் பெண் கவிஞர்களின் கவிதைப் போக்குகள், புதிய கதவுகளைத் திறந்து விட்டன. வெகுஜன பத்திரிகைகள், காட்சி ஊடகங்கள் தந்த முக்கியத்துவம் காரணமாகப் பெண் கவிதை மொழியானது, பரவலான கவனம் பெற்றது. பெண்ணுடலை முன்னிறுத்திய வீர்யமான மொழியிலமைந்த பெண் கவிதை வரிகள், தமிழ்க் கவிதைப் போக்கினுக்கு ஊட்டமளித்தன. இதுவரை கவிதை என்றால் வேண்டாம் என ஒதுக்கியவர்களும், மெல்லக் கவிதையின் பக்கம் திரும்பி, அய்யோ பெண்கள் இப்படிக் கவிதை எழுதலாமா எனப் பண்பாட்டுப் போலீஸ்காரர்களாக மாறிக் கூச்சலிட்டனர். பெண் கவிஞர்கள், வீண் அரற்றுதலை ஒதுக்கிவிட்டுக் கவிதைத்தளத்தில் காத்திரமாகத் தொடர்ந்து இயங்குகின்றனர். அவர்களின் வழியில் இன்று நிரம்பப் பெண்கள் கவிதை எழுதுவதில் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளனர். புதிய பெண் கவிஞர்கள் தாங்கள் சுயமாகக் கட்டமைத்த வெளியில், கவிதையின் வழியாகச் சிறகடிக்கின்றனர் ஒப்பீட்டு நிலையில் பெண்ணுடல் இயற்கைக்கு நெருக்கமானதால், உடல், மொழி என விரிந்திடும் கவிதைகள் தனித்து விளங்குகின்றன. காத்திரமாகக் கவிதைகள் எழுதிப் பொதுவெளியில் அங்கீகாரம் பெற்றுள்ள சீனியர் பெண் கவிஞர்களுடன் ஒப்பீடும்போது, அண்மையில் எழுதத் தொடங்கியுள்ள பெண் கவிஞர்களின் கவிதைகள் குறித்துப் பேச்சுகள் இல்லாத சூழல் நிலவுகிறது. முந்தைய தலைமுறைப் பெண் கவிஞர்களின் கவிதைப் பின்புலத்தைத் தொடர்ந்தும் மாறுபட்டும் எழுதுகிற நவீனப் பெண் கவிதை மொழியானது, தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்திற்கு வளம் சேர்க்கிறது. கடந்த பத்தாண்டுகளாகக் கவிதைத் தளத்தில் தீவிரமாக இயங்குகிற பெண் கவிஞர்களின் கவிதைகள், பெண்ணெழுத்தின் தொடர்ச்சியாக எங்ஙனம் செயல்படுகின்றன என்பதைக் கண்டறிய வேண்டியுள்ளது.

தமிழ் போன்ற தொன்மையான மொழியைக் கையாளுகிற பெண் கவிஞர், சமகால வாழ்க்கைக்கு நெருக்கமான உணர்வுடன், கவிதையாக்கத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகிறது. பண்பாடு சார்ந்து அடையாளம் என்பது இடைவிடாமல் ஆளுகை செலுத்துகையில், எல்லாக் கணத்திலும் பெண் எனத் தன்னை அறிதல் தொடர்கிறது. புறவெளியில் அர்த்தப்படும் பெண் பிம்பமும், குடும்ப நிறுவனம் கட்டமைக்கும் பெண் அடையாளமும் எதிரெதிராக உள்ளன. பெரியார் முன்வைத்த பெண் பற்றிய பேச்சுகள் ஒருபுறமும், மத நிறுவனங்கள் உருவாக்கிடும் பெண் இருப்பு இன்னொருபுறமும் உள்ளன. காட்சி ஊடகங்கள் பெண்ணுடலைப் பொருளாக மாற்றிடத் துடிக்கின்றன. ஒவ்வொருநாளும் மாற்றங்கள் பல்கிப் பெருகிடும்போது, யதார்த்த வாழ்க்கை எளிமையானதாக இல்லை. முன்னெப்போதையும்விட சிக்கலாகிக்கொண்டிருக்கும் இன்றையச் சமூகச்சூழலில், பெண் கவிஞர்கள், முந்தைய தலைமுறையினர் அறியாத விஷயம் குறித்து யோசிக்கிறபோது கவிதையானது, அக உணர்வும் அனுபவமும் கலந்து வெளிப்படுகிறது.

இன்றைய வாழ்க்கை மிகவும் கலவையாக இருக்கிறது. நுகர்பொருள் பண்பாட்டின் ஆதிக்கம் ஒருபுறம் எனில், மதிப்பீடுகளின் வீழ்ச்சி இன்னொருபுறம் வலுவாக உள்ளது. சிடுக்குகளுடன் இருக்கும் வாழ்க்கையைப் புரிந்திட உதவிடும் வரையறைக்குட்பட்ட, அறிவுப் பின்புலம் காரணமாக வித்தியாசமான உணர்வின் எழுச்சிகளைக் கவிஞர் எதிர்கொள்ள நேரிடுகிறது. சமூக ஆண் என்பவன் ஒருவகையில் உருவாக்கப்பட்டவன்தான். உடல்கள் குறித்துக் கறாரான கருத்துக்களை உருவாக்குகிற மத அடிப்படைவாத அமைப்புகள், ஆண்களை ஆதிக்கவாதிகளாகவும், பெண்ணுடல்களை அதற்கு அடங்கிப் போகிறவர்களாகவும் உருவாக்குகின்றன. இதனால்தான் பெரும்பான்மையான ஆண்கள் அதிகாரத்தின் போதையில் மூழ்கி, ப்ரியமும் சிநேகமும் இல்லாத வறண்ட வாழ்க்கை வாழ்கின்றனர். ஆணும் பெண்ணும் ஒத்திசைந்து வாழ வேண்டிய தேவையைச் சமகாலப் பிரச்சினைகள் வலியுறுத்துகின்றன. இத்தகைய சூழலில் சமகாலப் பெண் கவிஞர்கள் சித்திரிக்க விழையும் உலகு என்னவாக இருக்கிறது?

பெண்ணின் தனிப்பட்ட வாழ்வைத் தொன்மக்கதைக்குள் பொருத்துகிற கவிஞர் அ.ரோஸ்லின் கவிதை வரிகள் தனித்துவமானவை. மதுரை மாநகரில் இன்றளவும் நடப்பது தெய்வமாக வணங்கப்படுகிற மீனாட்சியின் ஆட்சிதான். மீனாட்சியம்மன் கோவில் என்று சொல்வதுதான் இப்பவும் மதுரைவாசிகளின் வழக்கம். இரா. மீனாட்சி, ந.ஜயபாஸ்கரன் போன்ற கவிஞர்கள் மீனாட்சி தொன்மம் பற்றி எழுதியுள்ள கவிதைப்போக்கில் ரோஸ்லினும் பயணித்துள்ளார். அதியற்புதப் புனைவு, மிகையான கற்பனைக்குப் பெரிதும் இடமளிக்காத நவீனத் தமிழ்க் கவிதை மரபில், புராணத் தொன்மத்தைக் கவிதையாக்கியுள்ள ரோஸ்லின் ஒருவகையில் நடப்பு வாழ்க்கையின் நல்லதும் கெட்டதும் கலந்த நிலையைச் சித்திரிக்க விழைகிறாரா? வைதிக சமய நெறிக்குள் அடங்கிடும் மீனாட்சி பற்றிய புராணக்கதைகள் பருண்மையான அரசியல் நோக்கம் கொண்டவை. என்றாலும் மீனாட்சியை முன்வைத்து ஆண்டு முழுக்க நடைபெறுகிற கொண்டாட்டங்கள், கவிஞருக்கு வேறுவகைப்பட்ட உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. மீனாட்சி, கதைகளின் வழியாக ஏற்படுத்துகிற புனைவுவெளி முடிவற்று விரிகிறது.

**கிளியைக் காணாது பதறும் மீனாட்சி**
**மெய் திமிற இரைந்து துடிக்கையில்**
**உள் புகைச்சல் மறைத்த**
**முறுவலிப்பில்**
**விஷத்தை**
**அமிழ்தமெனக் குடித்து**
**வீழ்ந்து கிடக்கிறான் சொக்கன்.**
**புவியை மெல்ல**
**விழுங்குகிறாள் மீனாட்சி** **(மஞ்சள் முத்தம்)**

கவிதையில் சித்திரிக்கப்பட்டுள்ள மீனாட்சி யார் என்ற கேள்வி தோன்றுகிறது. அவள் உலகை உய்விக்கும் கடவுளா? நவீனமான பெண்ணா? அவள் கோயில் பிரகாரங்களில் /களிப்பின் மிகுதியில் /சுற்றி வருகிறாள்/சொக்கனற்ற நிறைவினில்... மீனாட்சி ஆட்சியின்/ மாயை பிம்பங்கள்/ படிந்த குளம்/ அன்றிலிருந்து/ பலத்த சத்தமாய்/ கதறத் துவங்கியிருக்கிறது. மதுக்குப்பியில் மூழ்கியிருக்கும் சொக்கன்களின் கொடூரச் செயல்களினால் யோனிகள் கிழிபடுகின்றன் மீனாட்சியின் உடல்கள் துடிக்கின்றன. வதையினால் கதறுகின்ற பெண்ணின் அவல ஒலி, மீனாட்சி ஆட்சி என்ற மாயை படிந்த குளத்தின் கதறலாக மாறிக் காற்றில் மிதக்கிறது.

சங்கக் கவிதை தொடங்கி அக உணர்வினை முன்னிலைப்படுத்தும் போக்கு, தமிழ் மரபில் முக்கிய இடம் வகிக்கிறது.. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் உணர்வு இயற்கையானது. ஒத்த மனநிலையுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலுறவு என்பது ஒருவகையில் பெரும் பேறு. தமிழ் நவீன கவிதையில் ஜாம்பவானாக விளங்குகிற பெரும்பான்மையான ஆண் கவிஞர்கள், காதலைப் புறக்கணித்துள்ளனர். காதல் என்பது பேசாப் பொருளாக மாறியுள்ள சூழலில், காதலின் கொண்டாட்டம், ஏக்கம், பிரிவு, வலி பற்றிய பெண் கவிஞர்களின் மொழியானது, சங்க மரபின் தொடர்ச்சியாகும். சமூகரீதியில் ஆணும் பெண்ணும் முரண்களால் கட்டமைக்கப்பட்ட நிலையில், எல்லாவிதமான வன்முறைகள், வன்மங்கள், குரோதங்கள் போன்றவற்றைத் தாண்டி, ஒருவரையொருவர் காதலித்தும் நேசித்தும் வாழ வேண்டியதன் சூட்சுமத்தைக் கண்டறிந்துள்ள பெண்களின் கவிதைகள் முக்கியமானவை. மஞ்சள் கொன்றை/ மலர்களால் நிரம்பியிருக்கிறது/ சாலை./ அங்கு நீ தந்த/ ஒரு முத்தத்தில்/ ஒரு மஞ்சள் பூவென /சுருங்கி விட்டது பூமி. புனைவுவயப்பட்ட நிலையில் ஆண் மீதான ப்ரியத்தை ஈரமான சொற்களில் ரோஸ்லின் சொல்கிறார். இரவின் பிரிவு/ ஒவ்வொரு மணிக்கும்/ இடைவெளியை அதிகமாக்கி/ நீள்கிறது/ எனது இரவின் தனிமைக்குள்/ நெருங்கிப் பற்றுகிறது/ உன் ஞாபகத் தீ. ஆண்களின் உலகம் காலங்காலமாக ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு, வெளியெங்கும் அலைந்து திரிகையில், வீட்டில் காத்திருக்கும் பெண்ணின் மனம், மனித இருப்பின் ஆதாரமான உணர்வில் திளைக்கிறது. பிரிவு என்பது இரவுடன் தொடர்புடைய நிலையில், பெண்ணின் மனதில் ஏற்படுத்தும் உணர்வுகள் நுட்பமானவை.

லாவண்யா சுந்தரராஜன் தன்னைச் சுற்றிலும் நடக்கிற நிகழ்கிற சம்பவங்களைக் கவிதை வரிகளில் காட்சிப்படுத்தியுள்ளார். அவருடைய மனதில் கண நேரத்தில் உருவாகிடும் பதிவுகள், கவித்துவமான சொற்களாகியுள்ளன. 'தொடர்ந்து வரும் கடந்த பாதை' என நான் – நீ எனக் கவிஞர் சித்திரிக்கிற காட்சிகள், தேர்ந்த கவிதையாக வெளிப்பட்டுள்ளன. கவிஞர் லாவண்யா, நீ எனக் குறிப்பிடும் நீயும் ஒருவகையில் நான்தான். புறநிலையில் கவிதை வெளிப்படுத்தும் அர்த்தம், இன்னொருநிலையில் முழுமையாக அகம் சார்ந்து மாறுபடுகிறது. இரு வேறு நிலைகளில் இருப்பு பற்றிய கவிதை நுட்பமானது. அடையாளம் துறக்கும் நேரம் எனக் கவிதையின் வழியாகப் பால் அடையாளத்தைத் தூக்கி எறிய விழைவதை லாவண்யா உரக்கச் சொல்கிறார். பெண்ணிற்கான அடையாளமெதையும்.∵எதிர்பார்க்க வேண்டாம் என்னிடமென்று என்ற வரிகளில் அவருடைய கோபத்திற்கான நியாயங்கள் இருக்கின்றன. இதுவரை பெண்ணுடல் என்பதற்காகச் சமூக இருப்பில் அவள் எதிர்கொண்ட துயரங்கள் தொடர்கையில் எதிர்மறை மனோபாவம் கவிதையாகியுள்ளது. உடலைத் துறத்தல், புலன்களை ஒடுக்குதல் எல்லாம் காலங்காலமாக அடிமை உடல்களைத் தயாரிப்பதற்கான ஆதிக்க அரசியல் என்பது கவனத்திற்குரியது. பெண்ணுடல் என்பது இயற்கையுடன் இயைந்த நிலையில் அந்தரங்கமான மனம் உருவாக்கும் புனைவுகள் முக்கியமானவை. பெண்ணுடலைச் சுமையாகக் கருதுகிற கவிஞர், 'ஆயுதக் காதல்' என்ற கவிதையில், பெண்ணுடல் குறித்த வேறு காட்சியை உருவாக்கியுள்ளார்.

**கதிர்வீச்சு சாதனத்தை**
**மேலாடை அகற்றிவிட்டு**
**காதலனைப் போல்**
**இறுகக் கட்டிக்கொள்ளச் செய்கிறார்கள்**

**இசிஜி கருவிக்கு**
**கச்சை நெகிழ்த்தி**
**முலையருகே இடம்தர வேண்டியிருக்கிறது**
**குழந்தையின்மைச் சிகிச்சைக்கென**
**பலமுறை நுண்ணொளி ஊடுருவல் ஆயுதம்**
**ஆண்குறியாக வன்புணர்கிறது. (அறிதலின் தீ)**

உடல் பற்றிச் சமூகம் பன்னெடுங்காலமாகக் கட்டமைத்துள்ள புனைவுவெளியில். அசலாகத் தன்னிலையை அறிகின்றபோது, பெண் அடையாளம் நவீன வாழ்க்கையில் தொந்தரவாக இருக்கிறது. பெண்ணுடலை மர்மப்படுத்தியுள்ள சூழலில் உடலை முன்வைத்து அறிவியல் கருவிகள் செய்கிற சோதனையில் மாட்டிக்கொண்டதை 'ஆயுதக்காதல்' எனப் பகடி செய்தாலும், பெண் மனம் படுகிற பாடுகள், கவிதை வரிகளாகி உள்ளன. ஒருபோதும் பெண் என்ற இருப்பில் இருந்து விலகிட இயலாத சூழலில் பெண்ணுடல் தரும் நெருக்கடியைக் கட்டவிழ்த்திடும் கவிதை நுண்ணரசியல் சார்ந்தது.

லாவண்யா தன்னை இயற்கையுடன் பொருத்திக் காண்கிற மனநிலை, கவிதையை வேறு தளத்திற்கு மாற்றுகிறது. மலைப்பெண் என்ற சொல் கிளர்த்தும் அனுபவங்கள் அற்புதமானவை. மாலை நெருங்கநெருங்க/ எல்லா மலைகளும்/ பெண்ணாய்த் தெரிகிறது/ இரவில் வாதையுடன்/ அவை புரண்டு படுக்கும் ஓசை/ எனக்கு மட்டும் கேட்கிறது. படைப்பூக்கமான மனநிலையில் மலையானது இரவில் வாதையுடன் புரள்கிறது என்பது அழகிய காட்சிப் படிமம். விரிந்திடும் வானமெங்கும்/ சிறகடிக்கும்/ பறவை நான்/ இம்மாலைப்பொழுதில்/ நிலா தெரிகிறது/ பூமி தெரிகிறது/ எல்லைகள் மறைகிறது1எவரிடத்தும்/ தொலைவுமில்லை/ அருகிலுமில்லை/என் நினைவு எனத் தன்னிலையாய் விரிகிற கவிதை வரிகள், லாவண்யாவின் கவித்துவத்திற்குச் சான்று.

'பூக்கும் கணம்' எனக் கவிஞர் சுகிதா சித்திரிக்கிற தருணம், நட்சத்திரம் போல ஒளிர்கிறது.

**உறங்காத இரவுகளில்**
**அடர்ந்திருந்தது . . . இரவு**
**தோட்டத்து பவளமல்லி**
**மொட்டவிழ்த்து**
**வாசனையை**
**வீட்டுக்குள்ளே கொண்டு வந்து**
**பூக்கள் பூக்கும் தருணத்தை உணர்த்தியது**
**வெட்கம் அறிந்து**
**யாருமறியாத இருளில்**
**நள்ளிரவில் பூப்பெய்துவதற்கு**
**பூக்களுக்கு மட்டுமே தெரிகிறது (ஒரு காதலும் ஒரு செம்பு தண்ணீரும்)**

ஆண் மேலாதிக்கத்தின் அழுத்தம் குறித்த விமர்சனம் உண்டெனினும் அந்தக் கணத்தில் உணர்கிற அனுபவத்தைக் கவிதையாக்கியதில் சுகிதாவிற்குப் பாசாங்கு எதுவும் இல்லை. சங்கப் பெண் கவிஞரான வெள்ளிவீதியாரின் வழியில் இரவு பற்றிய காட்சி, அற்புதமான கவிதை வரிகளாகியுள்ளது. கவிதையின் முதல் வரியான 'உறங்காத இரவுகளில்' இரவு வேளையில் மனமும் உடலும் எதிர்கொள்கிற அனுபவங்கள் பற்றிய மனப்பதிவாக விரிந்துள்ளது. சுகிதா, வெறுமனே இயற்கை சார்ந்த காட்சியை விவரிப்பதாகத் தோன்றினாலும், சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள 'இறைச்சி'யுடன் ஒப்பீடத்தக்க அளவில் தொனிப்பொருள் கவிதையில் இடம் பெற்றுள்ளது. காலங்காலமாக மனித உடல்களை அடிமைப்படுத்திட புலன்களை ஒடுக்குவது மேன்மையானது எனப் போதித்துச் சிற்றின்பம் எனக் காதலையும் புணர்ச்சியையும் மதங்கள் புறக்கணித்த தமிழ்ச் சூழலில், சுகிதா உள்ளிட்ட பெண் கவிஞர்கள் மனத்தடைகள் இல்லாமல் காதல் உணர்விற்கு

முக்கியத்துவம் தந்துள்ளனர். சுகிதாவின் 'அறைக்குள் சூரியன்' கவிதையானது, காமத்தின் வாசனையை நுட்பமாகச் சொல்கிறது. உறக்கம் கலைத்த இரவில்/ உன் வாசனை என்னைக் கலைத்தபோது/ காமம் என்னைத் தின்று கொண்டிருந்தது/ கண் திறந்த வேளையில்/ சூரியன்/ அறைக்குள் வந்து அமர்ந்திருந்தது. பூமி இயங்குவது போலக் கவிதையும் காலத்தை மீறி மனங்களில் அலையாகப் பரவுகிறது.

நினைவுகளின் வழியாக மீட்டெடுக்கும் பால்ய கால அனுபவங்கள் ஒருபோதும் தீராதவை. வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையிலும் ஒன்ற முடியாமல் தவிப்பது இயல்பாகியுள்ளது. அன்றாட வாழ்வில் தவிக்கிற தவிப்புகள் குறித்தான உமா மோகனின் கவிதை பிரிவின் தவிப்பைச் சொல்கிறது.

**மனிதர்களுக்கென்ன**
**ரயிலேறிப் போய்விடுகிறார்கள்**
**கசிந்த கண்ணீருக்கும்**
**மென்தழுவலுக்கும்**
**மௌன சாட்சியாய்க் கிடக்கும்**
**நடைமேடையையும்**
**உயரத் தூண்களையும்**
**கழிவறை வாடை இல்லாமல்**
**பூவும் பிஞ்சும் உதிர்த்தபடி**
**நிற்கும்**
**பெயர் தெரியா இம்மரத்தையும்**
**என்ன செய்வது (துயரங்களின் பின் வாசல்)**

பிரிவின் வலியைக் கவிதையாக்கியுள்ள உமாமோகனின் சொற்கள், இயற்கையுடன் தோய்ந்துள்ளன. ஒருபோதும் முடிவற்ற பயணம் என அறிந்தும், வழியனுப்பச் சென்ற நிலையில் ரயில் நிலையத்தில் இருக்கும் அசையா பொருட்களையும், மரத்தையும் நேசிக்கிற மனம், கருணையில் ததும்புகிறது.

பத்மஜா நாராயணனின் கவிதைகளில் ஆன்மாவின் முடிவற்ற காதல், சொற்களின் வழியே மிதந்துகொண்டிருக்கிறது. பதைத்திடும் மனதுடன் வெளியில் தேடியலைகிற பத்மஜாவின் உலகு அந்நியோனியமானது.

**சிறிது மூடியிருந்த**
**கதவின் இடையில்**
**தெரிந்த**
**உன் பாதங்களுக்கேற்ற**
**முகத்தை**
**நான் மனதில் வரைந்து விட்டேன்**
**வரைந்த அது**
**சிதையப் போகிறது**
**தயவுசெய்து**
**என் கண் படாமல் போ நீ! (மலைப்பாதையில் நடந்த வெளிச்சம்)**

பத்மஜாவின் பார்வையில் பதிவாகிடும் தருணங்களில் பல்வேறு சாத்தியப்பாடுகள் வெளிப்படுகின்றன. 'காலோவியம்' கவிதையில் அவர் காதலைச் சொல்வது போல வாசித்தாலும், வேறு எதிர்நிலையைச் சித்திரிக்கிறார் என்ற ஐயமும் கிளப்புவது, மொழி விளையாட்டுத்தான்.

கவிதை மொழியை முன்வைத்து முபின் சாதிக் உருட்டுகிற சொற்கள், பளிங்குச் சோவிகளாக மலர்ந்து விழுகின்றன. மையமற்ற நிலையில் சொல் பொருண்மையின் எல்லைகளைமீறிக் காற்றில் வீசியெறியப்பட்ட சொற்கள், வாசகரை மிரட்டுகின்றன. கட்டற்று வெளியில் தறிகெட்டலையும் மனதின் அரற்றல்கள் என்று முபின் சாதிக்கின் கவிதைகளைச் சொல்ல முடியுமா? யோசிக்க வேண்டியுள்ளது. ஓரளவு கவிதை ஈடுபாடு உள்ளவர்களையும் குழப்புகிற சொற்கள், கமுக்கமாக மாறியுள்ளன.

**நீலப் பறலின்**
**காந்தச் சிறகும்**
**மண்ணுள் முகிழ்த்த**
**வெள்ளி இறக்கை**
**தூவும் புகையில்**
**முடங்கும் வாசம்**
**தொகை பெருக்கி**
**விசிறிய வானம்**
**சிவந்த மூக்கில்**
**கீற்று மேகமாய்**
**கீழிறங்கும் சிதறி (அன்பின் ஆறாமொழி)**

பித்து மொழியில் கட்டமைந்த சொற்கள் நிரம்பிய முபின் சாதிக்கின் கவிதைகள், வாசகரை முழுக்க மறுக்கின்றன.

பெண் எனத் தன்னையறிந்து இதுவரை சமூகம் உருவாக்கியுள்ள பெண்ணுடல் பற்றிய புரிதல்களுடன் எழுதுகிற சக்தி செல்வியின் கவிதைகள், ஒருவிதமான ஊசலாட்டத்துடன் தவிக்கின்றன. தந்தையைப் பற்றிய கவிதையைக் கவிஞரின் வாக்குமூலம் என்று சொல்லலாம். ஆண் என்ற ஜீவராசியானது பெண்ணுக்கு எதிரானது என்று நவீனப் பெண்ணியக் கருத்தியலுக்கு மாறாக அடுத்த பிறவியிலும் அப்பாவுக்கே மகளாகப் பிறக்க வேண்டுமென்பது, கவனத்திற்குரியது.

**இறைமை என்றாவது என் முன் தோன்றினால்**
**நான் ஒரே ஒரு வரம் கேட்பேன்**
**மறுமையில் எனக்கு நம்பிக்கை இல்லை**
**இறையே அப்படி மறுபிறவி என ஒன்று இருப்பின்**
**என் அப்பாவுக்கே நான் மகளாக வேண்டுமென... (சிநேகத்தின் வாசனை)**

காதல், காமம், நேசம் எனப் ப்ரியத்துடன் விவரிக்கப்படும் சக்தி செல்வியின் கவிதைகளில் பெண்ணின் மனம் நுட்பமாகப் பதிவாகியுள்ளது. 'மிருகம் ஒன்று' என விரிகிற கவிதை வரிகள்:

**அரவம் தீர்ந்த பின்னிரவில்**
**அழிக்க நீளும் கரங்களுடன்**
**எனக்குள் எழும் இம்மிருகம்**
**என் மடி மேல் அமர்ந்து**
**என் தசைகளைத் தின்றழிக்கும் இது**
**என்னால் ஒருகட்டத்தில் ஆதுரமாய்**
**நேசிக்கப்பட்டது**
**முப்பதுக்கு மேல் நான் அதை**
**மூழ்கடிக்க முனைய**
**அது அலைகிறது உயிர்த்தெழுந்து**

**இம்மிருகம் என்னில் மாளுமோ**
**இல்லை தின்று தீர்க்குமோ**
**இனி...**

அன்பின் நேசத்துடன் சூழலைக் கவிதையாக்கியுள்ள சக்தி செல்வியுடன் மல்லாடுகிற மிருகம் எதுவெனத் தெரியவில்லை. எல்லாவிதமான சாத்தியப்பாடுகளுக்கும் இடமளிக்கிற கவிதையில் காமவேட்கை என்பது பொருத்தமா என்பது புலப்படவில்லை. அந்த மிருகம் பின்னிரவில் கவிதைசொல்லிக்குள் இருந்து உயிர்தெழுந்து அலைவது நிச்சயம் தற்செயலானது அல்ல.

கவிஞர் சுதா நீநாவின் அகம் சார்ந்த கவிதை வரிகள், காதல் வயப்பட்ட மனதின் தவிப்பை எளிமையாகச் சொல்கின்றன.

**உனது கரங்களிலிருந்து**
**விடுவித்துக்கொண்ட என் விரல்களில்**
**உலரா கணங்களின் இனிமை**
**எப்போதும் என்க்குள்ளேயே இருத்திக்கொள்ளும்**
**நினைவுகளாய் உன் சிரிப்பலைகள்**
**பின்னாலேயே வந்து**
**விடை பெற்றுச் செல்லும் (நிழல்களின் சாலை)**

பெண் கவிதை என்றால் வீர்யமான மொழியில் கலகத் தொனியிலானது என்ற பொதுப்புத்தியைச் சிதைத்திடும் வல்லமையுடன் சுதா நீநா சொல்லிடும் மெல்லிய மன உணர்வு முக்கியமானது. அது வாசிப்பில் கிளர்த்துகிற அனுபவங்கள் முடிவற்று விரிகின்றன.

'காலங்களைக் கடந்து வருபவன்' என்ற சுஜாதா செல்வராஜின் கவிதைத் தொகுதியின் தலைப்பு, ஆண்-பெண் உறவு பற்றிய புரிதலைச் சொல்கிறது. எதிரெதிர் முனைகளில் ஆணையும் பெண்ணையும் முன்னிறுத்தி, ஆண் மேலாதிக்க நிலையைச் சாடுகிற சூழலில், சுஜாதா நீ-நான் என் இருவேறு எதிரிணை மூலம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**நம் இருவருக்குமிடையில்**
**நிமிர்ந்து நிற்கும் அந்தச் சுவர்**
**அத்தனை உறுதியானதொன்றும் இல்லைதான்**
... .... ...
**நெருங்கி நிற்கும் அவ்விரு கண்கள்**
**இடையில் கிடக்கும் நாசி பற்றி**
**கவலையுறுவதே இல்லை (காலங்களைக் கடந்து வருபவன்)**

ஏக்கம், தாபம், வேட்கை குறித்த பெண்ணின் மனம் படுகிற வதை நெகிழ்ச்சியான மொழியில் கவிதையாகியுள்ளது. பெண்ணுடல் அரசியல் எனக் கவிதைகள் எழுதித் தீர்க்கப்பட்ட சூழலில் சுஜாதா செல்வராஜ், கழிவிரக்கமாகப் பெண்ணுடல் எதிர்கொள்ளும் வலியைக் கவிதை வரிகளாக்கியுள்ளார்.

**இம்மழைக்காலம்**
**மேலும் பிணி சேர்க்கிறது**
**நிலமெங்கும் ஊறும் ஈரம்**
**கால்களை வயிற்றில் குறுக்கி**
**சுருண்டிருக்கிறேன்**

**சர்ப்பங்கள் இரண்டு**
**பாதங்களில் குடைந்து ஏறி**
**இடையில் ஓங்கிக் கொத்திவிட்டு**
**வயிற்றில் சுருண்டு முறுக்குகின்றன**

ஒருபோதும் ஆண் அறிய இயலாத வலி குறித்தான கவிதையானது, நான் என்ற நிலையில் அனுபவம் சார்ந்து உக்கிரத்துடன் வெளிப்பட்டுள்ளது. பெண்ணுடல் என்ற நிலையில் இயற்கை சார்ந்து எதிர்கொள்கிற வலிகளையும் அனுபவங்களையும் பேசுவது, பெண்ணெழுத்தின் தவிர்க்கவியலாத அம்சம்.

பெண் எனத் தன்னை அறிந்திட்ட நிலையில், மனமும் உடலும் அடைகிற அவஸ்தைகள் அளவற்றவை. பெண்ணுடல் காரணமாக எதிர்கொள்கிற பிரச்சினை ஒருபோதும் எழுதித் தீராதது. கிருஷ்ணப்ரியாவின் கவிதைகள் பெண்ணெழுத்தின் அடையாளமாக உள்ளன. 'கசிவின் பயம்' கவிதை நாற்பதைக் கடந்த பேரிளம் பெண்ணின் மனதைப் பதிவாக்கியுள்ளது.

**கண்ணாடிகள் சூழ்ந்த**
**கடைகளில் நுழையும்போதோ**
**ஓரப்பார்வையால்**
**என் பின்புறம் பார்க்கிறேன்**
**… … …**
**நாற்பதைக் கடந்து**
**நாலைந்து வருடமாகியதில்**
**எப்போது வருமோ, இது**
**என்று பயந்துதான் நகருகிறது**
**என் ஒவ்வொரு பொழுதும்…** **(வெட்கத்தில் நனைகின்ற…)**

அன்பு செலுத்துதல், அன்புக்கு ஏங்குதல், மெல்லிய உணர்வுகளைப் போற்றுதல், காதல், கனிவு, குழந்தை, பூக்கள், பெண்மை, தாய்மை ஈரம் ததும்பும் வாழ்வின் கணங்கள் காலங்காலமாகக் கவிதை மொழியில் பதிவாகின்றன. கவிதை என்பது ஒருவகையில் அழகியலின் உச்சம். பெண் என்ற நிலையில் தாய், மனைவி என அணிய நேரிடும் வேடங்களுடன், அன்றாட அலுவலகப் பணி, கடந்த கால நினைவுகள் எனக் குதுகலமும் கொண்டாட்டமும் கிருஷ்ணப்பிரியாவின் கவிதைகளில் வெளிப்படுகின்றன. 'அசல் சுற்றுலா' எனக் கடந்து போன நாட்கள் பற்றிய கவிதைப் பதிவுகள், உயிரோட்டமானவை. பேறு கால விடுப்பு வரிகள் தாய்க்கும் குழந்தைக்குமான நேசத்தைச் சொல்கின்றன. அத்தனையொன்றும்/ சுலபமில்லைதான்/ பொய் பேசுவது என்றாலும்/ சில சமயங்களில்/ உண்மையைப் பேசுவது என்பது/ பொய் சொல்வதை விடவும்/ கூடுதல் சிரமமாய்த்தான் இருக்கிறது. செயற்கையாக இறுக்கிய சொற்களைக் கவிதை என்று நம்புகிற தமிழ்ச் சூழலில் கிருஷ்ணப்ரியாவின் கவிதைகள் எளிமையுடன் உள்ளன

பெண்ணின் வாழ்க்கை என்பது ஒருவகையில் பெரிய திட்டங்கள் இல்லாததது எனப் பெரும்பாலான ஆண்களின் மனவோட்டம் கட்டமைத்திடும் புனைவைக் கலை இலக்கியா போன்ற பெண் கவிஞர்கள் எளிதில் புறந்தள்ளுகின்றனர்.

**உள்ளங்கைக்குள் ஒரு**
**கடலைக் கேட்டேன்-என்**
**அந்தப்புரத்திற்கு ஒரு**
**கடவுளைக் கேட்டேன்**
**மழலை தவழத் தொடங்கியது**
**.. … ..**
**வார்த்தைகளுக்குள்**

**காதல் சொட்டும் ஆண்டாளையும்**
**நிமிடங்களுக்குள்**
**நிசம் சொட்டும் வாசகங்களையும்**
**கேட்டேன்- மழலை மொழி பேசுகிறது (என் அந்தப்புரத்திற்கு ஒரு கடவுளைக் கேட்டேன்)**

கலை இலக்கியாவின் கவிதையானது வழமையில் இருந்து வேறுபட்டு, கடவுள் பற்றிய கருத்தியலையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

'தேன் இனிப்பது எல்லோருக்கும் தெரியாது' என்ற கவிதைத் தொகுதி மூலம் அறிமுகமான உமாதேவி, விளிம்புநிலை அரசியலை கவிதையாக்கியுள்ளார். அரசியல் என்பது ஆண்களுக்கான வெளி என்ற புனைவைக் கேள்விக்குள்ளாக்கும் உமாதேவி, சமகாலப் பிரச்சினையைக் கவிதையாக்குவதில் ஆர்வம் காட்டுகிறார். இரவு பற்றிய கவிதை வாசிப்பில் சலனத்தை ஏற்படுத்துகிறது.

**துரோகத்தின் நஞ்சுக்கொடிகளை**
**வளர்த்தெடுக்கும்**
**இராப்பொழுது**
**ஒருபோதும்**
**உறங்குவதற்காவதில்லை**

சங்ககாலம் தொடங்கிப் பெண் காதலன்∴கணவன்∴குழந்தை என யாரோ ஒருவருக்காக வீட்டில் காத்திருப்பது தொடர்கிறது. பெண்ணின் புழங்குவெளி வரையறுக்கப்பட்ட சூழலில், இரவு என்பது துரோகத்தின் நஞ்சுக்கொடி என்ற வரியும், உறங்குவதற்காவதில்லை என்ற முடிப்பும், கவிதையை முடிவற்றதாக்குகின்றன. காலங்காலமாகத் துரோகத்தின் வலியை எதிர்கொள்கிற பெண் மனம் , துரோகத்தின் நஞ்சுக்கொடி எனப் படிமக்காட்சி மூலம் விவரிப்பது, கவிதையைச் செறிவுள்ளதாக்குகிறது.

அடையாளமிழந்து சிதைந்திடும் மனநிலை காரணமாக வெளிப்படும் குரல், ஜெ.நிஷாந்தினியின் கவிதையில் வலியாக உருமாறியுள்ளது.

**முகமிழந்து நகரத்தின்**
**சௌகரியங்களை விநோதமாக**
**ரசித்துப் பொழுதைக் கழிக்கிறேன்**
**புலம்பெயர்விலிருந்து**
**எல்லாவற்றையும் மிக**
**மெதுவாகக் கற்றுக் கொள்கிறேன்**
**பல தடவைகள்**
**என்னுடைய அடையாளம்**
**சிதைக்கப்பட்டாயிற்று**
**உங்களுக்குத் தெரியவில்லையா?**
**நான் முன்னேயும் செல்ல இயலாத**
**பின்னேயும் திரும்ப முடியாத**
**பெரு இடைவெளியில் இருப்பது (விநோதப் பறவையின் கடற்கரை)**

பெண்ணுடல் பற்றிய பொதுப்புத்தியைக் கேள்விக்குள்ளாகிய சமூகச் சூழல் குறித்து ஆவேசமாகக் கவிதை எழுதிய நிலையில் இருந்து வேறுபடுகிறார் நிஷாந்தினி. அவருக்குப் பெரிய பிராது இல்லை. கல்வி அல்லது வேலையின் பொருட்டு வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டியது இயல்பாக மாறிய சூழலில், முகமிழந்து, நகரத்தின் வசதிகளை ரசிப்பது நடந்தேறுகிறது. மீண்டும் பழைய இடத்திற்குப் போக முடியாமல், புதிய சூழலுக்கும் பொருந்திப் போக இயலாமல் தவிப்பதுமான மனத்தின் துடிப்பு,

நெகிழ்ச்சியான மொழியில் கவிதையாகியுள்ளது. அவருடைய காத்திருப்பு கவிதை, இருப்பின் தேடலை வீர்யமான மொழியில் சொல்கிறது.

**முன்வாசல் நிழலில்**
**பதற்றத்துடன் காத்திருக்கிறேன்**
**மணிக்கணக்காய்**
**… … …**
**வெகுவிரைவில்**
**தென்படலாம்**
**எனக்கான உன்னத வாள்**

பெண் என ஒடுங்கி இருத்தல், அல்லது ஒடுக்குமுறைக்கு எதிரான மொழியில் பேசுதல் என்ற இரு வேறு நிலைகளுக்கு மாறாகக் கவிதை புதிய போக்கினை முன்னிறுத்தியுள்ளது. வெகுவிரைவில் தென்படும் எனக்கான உன்னத வாளுக்காகக் காத்திருத்தல் என்பது, தன்னம்பிக்கை சார்ந்தது. அகமனப் பதிவாக அவ்வப்போது ஏற்படுகிற அனுபவங்கள், ஒரு புள்ளியில் தகித்துப் பிழம்பாகக் கொப்பளிப்பதுபோல நிஷாந்தினியின் கவிதை வெளிப்பட்டுள்ளது.

இயந்திரமயமாகிப்போன நகரத்து வாழ்க்கையில் எல்லாம் துரிதமயமான நிலையில் மனித இருப்புக் குறித்த கேள்விகளைக் கவிதையாக மஞ்சுளா முன்வைத்துள்ளார். கனவிலும் வந்து துரத்தும்/ அவசரங்களையே எண்ணி என ஆதங்கப்படும் மஞ்சுளா, முற்றிலும் இழந்துவிட்ட நேரங்களால்/ நிரம்பியுள்ளது/ இவ்வுலகம் எனக் கவிதை வரிகள் எழுதியிருப்பது தற்செயலானது அல்ல. 'உடல் மொழி' என்ற கவிதையானது புதிய மொழியில் விரிந்துள்ளது.

**வளர்ந்து கொண்டே இருக்கும்**
**என் உடல் தாண்டிய அழகொன்றை**
**சித்திரம் தீட்ட முடியாத துயரத்தில்**
**கண்ணுக்குள் கடல்நுரை பொங்க**
**தோற்றுப் போகிறது இயற்கை**
**கடல் அழகல்ல வானம் அழகல்ல**
**காடு மலை மரம் மட்டை**
**எதுவும் அழகல்ல**
**… … …**
**எல்லா வகையிலும் பேசப்பட்ட**
**அழகின் மொழி தோற்றுப்போய்**
**மீண்டும் என்னுடல் வரைய**
**பெருமிதம் கொண்டபடி**
**இரவு நகர்ந்துகொண்டே வருகிறது**
**பேசப்படாத என் உடல்மொழி நோக்கி** **(மொழியின் கதவு)**

புனைவின் சாத்தியங்களுடன் அழகின் மொழியானது, உடல்மொழியுடன் ஒத்திசைந்திட, இரவு நகர்ந்து வருதல் என்ற பார்வை நுட்பமானது. படைப்பின் புதிர்களைப் போல உடல் மொழியின் புதிர் ஒருபோதும் தீரப் போவதில்லை என்பதைச் சொல்கிறாரா கவிஞர் மஞ்சுளா? ஒரு சம்பவம் அல்லது காட்சியைக் கடந்து செல்கையில், உடல் இயல்பாக இருந்தாலும், மனம் ஒரு புள்ளியில் உறைந்திடும்போது எனக்கான கவிதை பிறக்கிறது எனச் சொல்லும் ச.ப்ரியாவின் கவிதை மொழி தனித்துள்ளது. தாய்க்கும் மகளுக்குமான உறவானது, ஈரம் கசிந்திடக் கவிதையாகியுள்ளது

**… … …**
**உடலின் சுழற்சியில்**

**வலி படந்த நாட்களில்**
**நீ காண்பிக்கும் அன்பும் அரவணைப்பும்**
**மயிலிறகால் மருந்திடுவதற்கு ஒப்பாகும்**
**மணமேடையில் விடைபெற்றுச்**
**செல்லும் தருணத்தில்**
**நீ கண் கலங்கியதை என்னிடம் மறைத்தாலும்**
**பிறிதொருநாள் புகைபடங்கள் எங்கும்**
**வழியக் கண்டேன் உன் பேரன்பை**
**… … …**
**மரணத்தின் கடைசிப்புள்ளியில்**
**நிகழ்ந்தேறிய என் தலைப்பிரசவத்தில்**
**எனக்கும் வாய்த்தது**
**உன் வலியுணரும் சந்தர்ப்பம்** **(ஓவியங்கள் வழியும் தூரிகை)**

அன்றாட வாழ்க்கை குறித்து வெளிப்படையாகப் பேசுகிற கவிதை வரிகள், பெண் மனதின் இன்னொரு வெளிப்பாடுதான். தந்தையின் துர்மரணம், தாயின் சிநேகம், குழந்தையின் குதூகலம் என விரியும் ப்ரியாவின் கவிதைகளில் வாழ்வின்மீதான நேசம் பொங்குகிறது.

உடலும் மனமும் கிளர்த்துகிற உணர்வின் வடிகால்களாகக் கவிதை வரிகளை உருவாக்குகிற ச.விசயலட்சுமியின் முயற்சி தனித்துவமானது. அவர் தனது இருப்பினை முன்வைத்து மனப்பதிவுகளைச் செறிவான மொழியில் கவிதையாக்கியுள்ளார். 'யாருக்காகவுமில்லாத காத்திருப்பு' என்ற நிலையில் விரியும் காட்சி அழுத்தமானது.

**… … …**
**இரவு அவளுக்கான**
**காதலுடன் காத்திருக்கிறது**
**மனதை வருடும் இசைக்கும்**
**கணந்தோறும் துடுப்பாக்கிச் செல்லும்**
**எழுத்துக்குமிடையே**
**ஏகாந்தமாயிருக்க**
**இரவு**
**அவளின் இச்சையைத் தூண்டுகிறது**
**அவளுக்குள் நிறைந்த**
**அடைபட்டத் தாய்மையை**
**தட்டியெழுப்புகிறது**
**ஒரு வனமிருகமென அவளுடல்**
**பேயாட்டம்கொள்ளும் மூர்க்கத்துடன்**
**கொடும் பற்கள் முளைக்க**
**காற்றில் மிதந்தபடி காத்திருக்கிறாள்**
**நீளுமவளின் பகலை விழுங்கிவிட** **(எல்லா மாலைகளிலும் எரியுமொரு குடிசை)**

பெண் என்பவள் ஆதித்தாயின் வாரிசு என்ற நிலையில், அவளின் மனப் போராட்டம் முடிவற்று நீள்கிறது. இரவு என்ற வெளியில் மிதக்கிற உடலும் மனமும் பெண்ணுக்கு வாய்த்திருப்பது தற்செயலானது அல்ல.

கவிதை என்பது மனுஷியைப் பொறுத்தவரையில் கூர்மையான ஆயுதம். அவர் உருவேற்றப்பட்ட சொற்கள் ஏற்படுத்தும் ஊடுருவல் வழியாகத் தன்னையும் கசப்பு ததும்பிடும் அனுபவங்களையும் கவிதை வரிகளாகத் தெறிக்கவிட முயலுகிறார். எங்கும் பரவிடும், அவநம்பிக்கையின் நிழலின்

வழியாகத் தத்தளித்தாலும் மனுஷியின் கவிதை வரிகள், அன்பின் சாரத்தினால் கொப்பளிக்கின்றன. அறிவியலில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான வளர்ச்சியும் உலகமயமாக்கலும் பரவலானாலும் ஆண்-பெண் உறவில் பெரிய மாற்றம் எதுவுமில்லை. எனவேதான் மனுஷியின் கவிதைகள், நான்- நீ என்ற முரணில் மனதின் வேதனையப் பதிவாக்கியுள்ளன. அதீதமான அன்பின் இன்னொரு வெளிப்பாடு வெறுப்பு. ஒருவர் இன்னொருவர் மீது செலுத்துகிற அளவுக்கதிகமான அன்பின் ஆதிக்கத்தினால், உறவானது வெறுத்து ஒதுக்குமளவு போய்விடும். பெரும்பாலான மணமுறிவுகளுக்குக் காரணம் அன்புதான்.

நீ/ என்னை வெறுத்து விட்டாய் என்பது/ ஆறுதலாய் இருக்கிறது/ உன்னால் வெறுக்கப்படும்போது/ மெல்ல உன் துரோகத்தை/ மறக்கிறேன் எனக் கவிதைசொல்லி தன் மனதிற்குள்ளாகச் சொல்லிடும் சொற்கள், உணர்வு தோய்ந்திடும் நிலையில் கவிதை வரிகளாகியுள்ளன. நீ வர மாட்டாய் என்றாகிவிட்ட போதும்/ ஏதோ ஒன்று/ தேவையாய் இருக்கிறது/ உன்னிடம் என்ற ஆதங்கமும் பிரிவின் இன்னொரு முகம்தான். கவிஞரின் மன உளைச்சல்கள் தீவிரமாகப் பொங்கிடுகையில், சொற்கள் அர்த்தமிக்கின்றன. மனுஷியின் வெறுப்பு கொப்பளிக்கும் கவிதை வரிகளையும் தன்னுணர்ச்சியின் வெளிப்பாடு எனச் சொல்ல முடியும்.

**உன்னைக் கொலை செய்து**
**என் வாழ்வை மீட்டுக்கொள்ளும்**
**எத்தனிப்புடன்**
**நாடகளைக் கடத்துகிறேன்**
… … …
**உன்னை அவமானப்படுத்தவென**
**உன் புகைப்படத்தின்மீது**
**சிறிது சாண்டையைப் பூசிவிட்டுச் சிரிக்கிறேன்**
… … …
**இனி**
**உன் இறப்பைப் பிரகடனப்படுத்துவதாய்**
**இருக்கட்டும்**
**எனக்கு வரும் கைபேசி அழைப்புகள்        (முத்தங்களின் கடவுள்)**

ஏன் இந்தக் கொலைவெறி எனக் கேட்கத் தோன்றினாலும், அதற்கான நியாயங்கள் இருக்கக்கூடும். இந்தக் கவிதையின் நீட்சியாக 'அவளை விட்டு விடுங்கள்…' கவிதையைக் கருத வேண்டியுள்ளது. நொந்து போயிருக்கிறாள் அவள்/ ஒரு துரோகம்/அவளைத் தின்று கொண்டிருக்கிறது/ இறந்து போவதற்கான/ ஆயத்த ஏற்பாடுகளை/ முப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள் எனத் தன்னுணர்ச்சியின் அவலத்தைச் சொல்கிற கவிதையின் கடைசி வரிகள், கவனத்திற்குரியன. அவள் ஒரு பேராசைக்காரி/ வாழ்ந்து தீர்க்க வேண்டும் என/ இன்னமும் விரும்புகிறாள்/ அவளை விட்டு விடுங்கள்.

அன்பின் ஈரம் ததும்பிடும் மனதின் வேட்கையும், துரோகம் அல்லது நிரந்தரப் பிரிவு ஏற்படுத்தும் வலியும் என மனுஷியின் கவிதையுலகு, ஒருவகையில் கள்ளங்கபடமற்றது. கவிதை என்பது இருப்பின் துயரத்தைக் கடந்து செல்லும் தோணியாக மனுஷிக்குப் பயன்படுகிறது. 'பறவையாகிய அவள்' கவிதை வரிகள் /பேண்டஸியாக உருமாறி, வெளியெங்கும் மிதக்கின்றன. இரண்டொரு நாளாக/ பறவையாக மாறி விட்டிருந்தாள்/ அவள்/ பறவையாகிவிட்டதை/ அவள் உணரவேயில்லை. புதிய சிறகுகளுடன் சிறகடிக்கும் பெண் பற்றிய பிம்பம், அவளது சுயமான தேடலைக் குறிக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் அறிமுகமாகியுள்ள பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புக்களைத் தேர்ந்தெடுப்பதில் random sampling முறையைப் பின்பற்றியுள்ளேன். எனக்குப் பிடித்தமான

கவித்துவமும் செறிவும் மிக்கக் கவிதை வரிகள் விமர்சனத்தில் பயன்பட்டுள்ளன் வேறு எவ்விதமான உள்நோக்கமும் இல்லை. யோசிக்கும்வேளையில் எழிலரசி, தி.பரமேசுவரி, தாராகணேசன், ஜி. கனிமொழி, சசிகலா பாபு, சம்யுக்தா மாயா அமுதினி அறிவுமதி, மாதவி, மாதங்கி, ராமலக்ஷ்மி, சாந்தி மாரியப்பன், தேனம்மை நாச்சியப்பன், கோகிலா வேலுச்சாமி எனப் பெண் கவிஞர்களின் பட்டியல் நீள்கிறது. அவர்கள் எழுதியுள்ள கவிதைகள் பற்றிய பேச்சுகள் தொடங்கிடும்போது, சமகாலப் பெண் கவிதை குறித்த முழுமையான செல்நெறி புலப்படும்.

சங்க காலத்தில் 41 பெண் கவிஞர்கள் கவிதை எழுதியுள்ளனர் என்பது உலகில் எந்தவொரு செவ்வியல் மொழியிலும் நடைபெறாத அரிய நிகழ்வு. அந்த மரபின் தொடர்ச்சியாகப் பெண்கள் நவீன கவிதைகள் படைப்பதில் ஈடுபட்டுள்ளது, பண்பாட்டில் முக்கிய அம்சம். அண்மையில் கவிதையின்மூலம் தனது அடையாளத்தையும் இருப்பினையும் பதிவாக்கிடும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாகப் பெருகியுள்ளது. பெண் என்ற பால் அடையாளத்தைப் பொருட்படுத்தாமல், பெண்ணெழுத்து என்பது எந்த சட்டகத்திற்குள்ளும் அடங்காதது என்ற ஓர்மையுடன் சில பெண் கவிஞர்கள் கவிதைகள் எழுதியுள்ளனர். ஒப்பீட்டு நிலையில் ஆண் எழுதும் கவிதையிலிருந்து விலகியும், சில வேளைகளில் இயைந்தும் எழுதியுள்ள பெண் கவிஞர்களின் உலகம் பரந்துள்ளது. காதலைப் பற்றி எழுதினால் விடலைத்தனமானது, முதிர்ச்சியற்றது என்ற புரிதல் நிலவும் தமிழ் நவீனக் கவிதைச் சூழலில், மனதில் கொப்பளிக்கும் காதல் உணர்வைக் கவிதையாக்கினால், அது வெறுமனே புலம்பல் என ஒதுக்கப்படும் என அறிந்தும் எழுதப்பட்டுள்ள பெண் கவிதை மொழி, மனத்தடைகள் அற்று வெளிப்பட்டுள்ளது. மனதின் அசலான வெளிப்பாடு காரணமாகப் பெரும்பாலான காதல் கவிதைகள் மிகையான உணர்ச்சியோ, அசட்டுப் புலம்பல் இன்றி, கவித்துவத்துடன் மிளிர்கின்றன. தொண்ணூறுகளில் சீனியர் பெண் கவிஞர்கள் கவிதையாக்கத்தில் பயன்படுத்திய முலை, யோனி, தூமை போன்ற சொற்கள், அடுத்த தலைமுறைப் பெண் கவிஞர்களின் பெண்ணெழுத்துகளில் இடம் பெறாமைக்கான காரணங்கள் ஆய்விற்குரியன. கவிதை என்றாலே எளிமையாக இருக்கக்கூடாது, ரேரரள
அமைய வேண்டும் என்றெல்லாம் கருதிக்கொண்டு, புனையப்படுகிற பெரும்பான்மையான நவீன கவிதைகளுடன் ஒப்பிடும்போது, பெண்களின் கவிதை மொழி, நெகிழ்ச்சியுடனும் எளிமையாகவும் உள்ளது. உலகமயமாக்கல் காலகட்டத்தில் எனக்கான இடம் தனித்துவமானது எனப் பெண்களின் தன்னம்பிக்கை வலுத்து வரும் சூழலில், சமகாலப் பெண் கவிதைகள் கடல் அலைகள் போல ஆர்ப்பரிக்கின்றன.

(நன்றி: உயிர்மை,2016 நவம்பர்)